ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# ॥ உபதேச ரத்தினமாலை ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font. Our sincere thanks to Sri. Rajasekar Ranganathan of Austin, Texas, for his help in proofreading this document.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ உபதேச ரத்தினமாலை ॥

கோயில் கந்தாடை அண்ணன் அருளிச்செய்த தனியன்

முன்னந் திருவாய்மொழிப் பிள்ளை தாம் உபதேசித்த⋆ நேர்
தன்னின் படியைத் தணவாத சொல் மணவாள முனி⋆
தன்னன்புடன் செய் உபதேச ரத்தினமாலை தன்னை⋆
தன் நெஞ்சுதன்னில் தரிப்பவர் தாள்கள் சரண் நமக்கே

‡எந்தை திருவாய்மொழிப் பிள்ளை இன்னருளால்⋆
வந்த உபதேச மார்க்கத்தைச் சிந்தை செய்து⋆
பின்னவரும் கற்க⋆ உபதேசமாய்ப் பேசுகின்றேன்⋆
மன்னிய சீர் வெண்பாவில் வைத்து (1)

கற்றோர்கள் தாம் உகப்பர்⋆ கல்வி தன்னில் ஆசை உள்ளோர்⋆
பெற்றோம் என உகந்து பின்பு கற்பர்⋆ மற்றோர்கள்
மாச்சரியத் தால்⋆ இகழில் வந்ததென் நெஞ்சே!⋆ இகழ்கை
ஆச்சரியமோ தானவர்க்கு (2)

‡ஆழ்வார்கள் வாழி⋆ அருளிச் செயல் வாழி⋆
தாழ்வாது மில்குரவர் தாம் வாழி⋆ ஏழ்பாரும்
உய்ய⋆ அவர்கள் உரைத் தவைகள் தாம் வாழி⋆
செய்ய மறை தன்னுடனே சேர்ந்து (3)

பொய்கையார் பூதத்தார் பேயார்⋆ புகழ் மழிசை
அய்யன்⋆ அருள்மாறன் சேரலர் கோன்⋆ துய்ய பட்ட
நாதனன் பர்தாள் தூளி⋆ நற்பாணன் நல் கலியன்⋆
ஈதிவர் தோற்றத் தடைவாம் இங்கு (4)

அந் தமிழால் நற்கலைகள்⋆ ஆய்ந்துரைத்த ஆழ்வார்கள்⋆
இந்த உலகில் இருள் நீங்க⋆ வந்துதித்த
மாதங்கள் நாள்கள் தம்மை⋆ மண்ணுலகோர் தாம் அறிய⋆
ஈதென்று சொல்லுவோம் யாம் (5)

‡ஐப்பசியிலோணம்⋆ அவிட்டம் சதயம் இவை⋆
ஒப்பிலவா நாள்கள் உலகத்தீர்!⋆ எப்புவியும்
பேசு புகழ்⋆ பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார்⋆
தேசுடனே தோன்று சிறப்பால் (6)

மற்றுள்ள ஆழ்வார்களுக்கு⋆ முன்னே வந்துதித்து⋆
நல் தமிழால் நூல் செய்து நாட்டை உய்த்த⋆ பெற்றிமையோர்
என்று⋆ முதல் ஆழ்வார்கள் என்னும் பேரிவர்க்கு⋆
நின்ற துலகத்தே நிகழ்ந்து (7)

பேதை நெஞ்சே!⋆ இன்றைப் பெருமை அறிந்திலையோ⋆
ஏது பெருமை இன்றைக்கென்றென்னில்⋆ ஓதுகின்றேன்
வாய்த்த புகழ் மங்கையர் கோன்⋆ மாநிலத்தில் வந்துதித்த⋆
கார்த்திகையில் கார்த்திகை நாள் காண் (8)

‡மாறன் பணித்த⋆ தமிழ் மறைக்கு⋆ மங்கையர் கோன்
ஆறங்கம் கூற அவதரித்த⋆ வீறுடைய
கார்த்திகையில் கார்த்திகை நாள்⋆ இன்றென்று காதலிப்பார்⋆
வாய்த்த மலர்த்தாள்கள் நெஞ்சே! வாழ்த்து (9)

கார்த்திகையில் உரோகிணிநாள்⋆ காண்மினின்று காசினியீர்!⋆
வாய்த்த புகழ்ப் பாணர் வந்துதிப்பால்⋆ ஆத்தியர்கள்
அன்புடனே தான்⋆ அமலனாதி பிரான் கற்றதற் பின்⋆
நன்குடனே கொண்டாடும் நாள் (10)

மன்னிய சீர் மார்கழியில்⋆ கேட்டை இன்று மாநிலத்தீர்!⋆
என்னிதனுக்கேற்றமெனில் உரைக்கேன்⋆ துன்னு புகழ்
மாமறையோன்⋆ தொண்டரடிப்பொடி ஆழ்வார் பிறப்பால்⋆
நான்மறையோர் கொண்டாடும் நாள் (11)

தையில் மகமின்று⋆ தாரணியீர்! ஏற்றம்⋆ இந்தத்
தையில் மகத்துக்குச் சாற்றுகின்றேன்⋆ துய்ய மதி
பெற்ற⋆ மழிசைப் பிரான் பிறந்த நாள் என்று⋆
நற்றவர்கள் கொண்டாடும் நாள் (12)

மாசிப் புனர்பூசம்⋆ காண்மினின்று மண்ணுலகீர்!⋆
    தேசித் திவசத்துக்கேதென்னில்⋆ பேசுகின்றேன்
கொல்லி நகர்கோன்⋆ குலசேகரன் பிறப்பால்⋆
    நல்லவர்கள் கொண்டாடும் நாள் (13)

‡ஏரார் வைகாசி⋆ விசாகத்தின் ஏற்றத்தைப்⋆
    பாரோர் அறியப் பகர்கின்றேன்⋆ சீராரும்
வேதம் தமிழ் செய்த⋆ மெய்யன் எழில் குருகை⋆
    நாதன் அவதரித்த நாள் (14)

‡உண்டோ வைகாசி⋆ விசாகத்துக்கொப்பொரு நாள்⋆
    உண்டோ சடகோபர்க்கொப்பொருவர்⋆ உண்டோ
திருவாய்மொழிக்கொப்பு⋆ தென் குருகைக்குண்டோ⋆
    ஒரு பார் தனில் ஒக்குமூர் (15)

இன்றைப் பெருமை அறிந்திலையோ⋆ ஏழை நெஞ்சே!⋆
    இன்றைக்கென்னேற்றமெனில் உரைக்கேன்⋆ நன்றி புனை
பல்லாண்டு பாடிய⋆ நம் பட்டர் பிரான் வந்துதித்த⋆
    நல்லானியில் சோதி நாள் (16)

மாநிலத்தில் முன்நம்⋆ பெரியாழ்வார் வந்துதித்த⋆
    ஆனி தன்னில் சோதி என்றால் ஆதரிக்கும்⋆ ஞானியர்க்-
கொப்போரிலை⋆ இவ்வுலகுதனில் என்று நெஞ்சே!⋆
    எப்போதும் சிந்தித்திரு (17)

மங்களாசாசனத்தில்⋆ மற்றுள்ள ஆழ்வார்கள்⋆
    தங்கள் ஆர்வத்தளவு தான் அன்றி⋆ பொங்கும்
பரிவாலே⋆ வில்லிபுத்தூர்ப் பட்டர் பிரான் பெற்றான்⋆
    பெரியாழ்வார் என்னும் பெயர் (18)

கோதிலவாம் ஆழ்வார்கள்⋆ கூறு கலைக்கெல்லாம்⋆
    ஆதி திருப்பல்லாண்டானதுவும்⋆ வேதத்துக்-
கோம் என்னுமது போல்⋆ உள்ளதுக்கெல்லாம் சுருக்காய்⋆
    தான் மங்கலமாதலால் (19)

‡உண்டோ திருப்பல்லாண்டுக்கு⋆ ஒப்பதோர் கலை தான்⋆
உண்டோ பெரியாழ்வார்க்கொப்பொருவர்⋆ தண் தமிழ் நூல்
செய்தருளும் ஆழ்வார்கள் தம்மில்⋆ அவர் செய் கலையில்⋆
பைதல் நெஞ்சே! நீ உணர்ந்து பார் (20)

ஆழ்வார் திருமகளார் ஆண்டாள்⋆ மதுரகவி
ஆழ்வார்⋆ எதிராசராம் இவர்கள்⋆ வாழ்வாக
வந்துதித்த மாதங்கள் நாள்கள் தம்மின்⋆ வாசியையும்⋆
இந்த உலகோர்க் குரைப்போம் யாம் (21)

‡இன்றோ திருவாடிப்பூரம்⋆ எமக்காக
வன்றோ⋆ இங்காண்டாள் அவதரித்தாள்⋆ குன்றாத
வாழ்வான⋆ வைகுந்த வான் போகம் தன்னை இகழ்ந்து⋆
ஆழ்வார் திருமகளாராய் (22)

பெரியாழ்வார் பெண் பிள்ளையாய்⋆ ஆண்டாள் பிறந்த⋆
திருவாடிப் பூரத்தின் சீர்மை⋆ ஒரு நாளைக்-
குண்டோ⋆ மனமே! உணர்ந்து பார்⋆ ஆண்டாளுக்-
குண்டாகில் ஒப்பிதற்கும் உண்டு (23)

அஞ்சுகுடிக்கொரு சந்ததியாய்⋆ ஆழ்வார்கள்
தன் செயலை⋆ விஞ்சி நிற்கும் தன்மையளாய்ப்⋆ பிஞ்சாய்ப்
பழுத்தாளை ஆண்டாளைப்⋆ பத்தியுடன் நாளும்⋆
வழுத்தாய் மனமே! மகிழ்ந்து (24)

‡ஏரார் மதுரகவி⋆ இவ்வுலகில் வந்துதித்த⋆
சீராரும் சித்திரையில் சித்திரை நாள்⋆ பார் உலகில்
மற்றுள்ள ஆழ்வார்கள்⋆ வந்துதித்த நாள்களிலும்
உற்றதெமெக்கென்று நெஞ்சே ஓர் (25)

‡வாய்த்த திருமந்திரத்தின்⋆ மத்திமமாம் பதம் போல்⋆
சீர்த்த மதுரகவி செய் கலையை⋆ ஆர்த்த புகழ்
ஆரியர்கள் தாங்கள்⋆ அருளிச் செயல் நடுவே⋆
சேர்வித்தார் தாற்பரியம் தேர்ந்து (26)

‡இன்றுலகீர்! சித்திரையில்⋆ ஏய்ந்த திருவாதிரைநாள்⋆
என்றையினும் இன்றி தனுக்கேற்றமென் தான்⋆ என்றவர்க்குச்
சாற்றுகின்றேன் கேண்மின்⋆ எதிராசர் தம் பிறப்பால்⋆
நாற்றிசையும் கொண்டாடும் நாள் (27)

‡ஆழ்வார்கள் தாங்கள்⋆ அவதரித்த நாள்களிலும்⋆
வாழ்வான நாள் நமக்கு மண்ணுலகீர்!⋆ ஏழ் பாரும்
உய்ய⋆ எதிராசர் உதித்தருளும்⋆ சித்திரையில்
செய்ய திருவாதிரை (28)

‡எந்தை எதிராசர்⋆ இவ்வுலகில் எந்தமக்கா⋆
வந்துதித்த நாள் என்னும் வாசியினால்⋆ இந்தத்
திருவாதிரை தன்னின்⋆ சீர்மை தனை நெஞ்சே!⋆
ஒருவாமல் எப்பொழுதும் ஓர் (29)

எண்ணரும் சீர்ப் பொய்கை முன்னோர்⋆ இவ்வுலகில் தோன்றிய ஊர்⋆
வண்மை மிகு கச்சி மல்லை மா மயிலை⋆ மண்ணியில் நீர்
தேங்கும் குறையலூர்⋆ சீர்க் கலியன் தோன்றிய ஊர்⋆
ஓங்கும் உறையூர் பாணன் ஊர் (30)

தொண்டரடிப்பொடியார் தோன்றிய ஊர்⋆ தொல் புகழ் சேர்
மண்டங்குடி என்பர் மண்ணுலகில்⋆ எண்திசையும்
ஏத்தும்⋆ குலசேகரன் ஊர் எண் உரைப்பர்⋆
வாய்த்த திருவஞ்சிக்களம் (31)

மன்னு திருமழிசை⋆ மாடத் திருக் குருகூர்⋆
மின்னு புகழ் வில்லிபுத்தூர் மேதினியில்⋆ நன்னெறியோர்
ஏய்ந்த பத்திசாரர்⋆ எழில் மாறன் பட்டர் பிரான்⋆
வாய்ந்துதித்த ஊர்கள் வகை (32)

சீராரும் வில்லிபுத்தூர்⋆ செல்வத் திருக்கோளூர்⋆
ஏரார் பெரும்பூதூர் என்னும் இவை⋆ பாரில்
மதியாரும் ஆண்டாள்⋆ மதுரகவி ஆழ்வார்⋆
எதிராசர் தோன்றிய ஊர் இங்கு (33)

ஆழ்வார்கள் ஏற்றம்⋆ அருளிச் செயல் ஏற்றம்⋆
தாழ்வாதும் இன்றி அவை தான் வளர்த்தோர்⋆ ஏழ் பாரும்
உய்ய⋆ அவர்கள் செய்த வியாக்கியைகள் உள்ளதெல்லாம்⋆
வையம் அறியப் பகர்வோம் வாய்ந்து (34)

ஆழ்வார்களையும்⋆ அருளிச் செயல்களையும்⋆
தாழ்வா நினைப்பவர்கள் தாம்⋆ நரகில் வீழ்வார்கள்
என்று நினைத்து நெஞ்சே!⋆ எப்பொழுதும் நீ அவர் பால்⋆
சென்றணுகக் கூசித் திரி (35)

தெருள் அற்ற ஆழ்வார்கள்⋆ சீர்மை அறிவாரார்⋆
அருளிச் செயலை அறிவார் ஆர்⋆ அருள் பெற்ற
நாதமுனி முதலான⋆ நம் தேசிகரை அல்லால்⋆
பேதை மனமே! உண்டோ பேசு (36)

ஓராண் வழியாய்⋆ உபதேசித்தார் முன்னோர்⋆
ஏரார் எதிராசர் இன்னருளால்⋆ பார் உலகில்
ஆசை உடையோர்க்கெல்லாம்⋆ ஆரியர்காள்! கூறும் என்று⋆
பேசி வரம் பறுத்தார் பின் (37)

‡எம்பெருமானார் தரிசனம் என்றே இதற்கு⋆
நம் பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார்⋆ அம் புவியோர்
இந்தத் தரிசனத்தை⋆ எம்பெருமானார் வளர்த்த⋆
அந்தச் செயல் அறிகைக்கா (38)

பிள்ளான் நஞ்சீயர்⋆ பெரியவாச்சான் பிள்ளை⋆
தெள்ளார் வடக்குத் திருவீதிப் பிள்ளை⋆
மணவாள யோகி⋆ திருவாய்மொழியைக் காத்த⋆
குணவாளர் என்று நெஞ்சே! கூறு (39)

முந்துறவே பிள்ளான்⋆ முதலானோர் செய்தருளும்⋆
அந்த வியாக்கியைகள் அன்றாகில்⋆ அந்தோ
திருவாய்மொழிப் பொருளை⋆ தேர்ந்துரைக்க வல்ல
குருவார்⋆ இக்காலம் நெஞ்சே! கூறு (40)

தெள்ளாரும் ஞானத்⋆ திருக்குருகைப் பிரான்
பிள்ளான்⋆ எதிராசர் பேர் அருளால்⋆ உள்ளாரும்
அன்புடனே⋆ மாறன் மறைப் பொருளை அன்றுரைத்தது⋆
இன்ப மிகும் ஆறாயிரம் (41)

தன் சீரை ஞானியர்கள்⋆ தாம் புகழும் வேதாந்தி⋆
நஞ்சீயர் தாம் பட்டர் நல்லருளால்⋆ எஞ்சாத
ஆர்வமுடன்⋆ மாறன் மறைப் பொருளை ஆய்ந்துரைத்தது⋆
ஏரொன் பதினாயிரம் (42)

நம்பிள்ளை தம் உடைய⋆ நல்லருளால் ஏவியிட⋆
பின் பெரியவாச்சான் பிள்ளை அதனால்⋆ இன்பா
வருபத்தி⋆ மாறன் மறைப் பொருளைச் சொன்னது⋆
இரு பத்து நாலாயிரம் (43)

‡தெள்ளியதா நம்பிள்ளை⋆ செப்பு நெறி தன்னை⋆
வள்ளல் வடக்குத் திருவீதிப் பிள்ளை⋆ இந்த
நாடறிய⋆ மாறன் மறைப் பொருளை நன்குரைத்தது⋆
ஈடு முப்பத்தாறாயிரம் (44)

அன்போடு⋆ அழகிய மணவாளச்சீயர்⋆
பின்போரும் கற்றறிந்து பேசுகைக்கா⋆ தம் பெரிய
போதமுடன்⋆ மாறன் மறையின் பொருள் உரைத்தது⋆
ஏதமில் பன்னீர் ஆயிரம் (45)

பெரியவாச்சான் பிள்ளை⋆ பின்புள்ளவைக்கும்
தெரிய⋆ வியாக்கியைகள் செய்வால்⋆ அரிய
அருளிச் செயல் பொருளை ஆரியர்கட்கிப்போது⋆
அருளிச் செயலாய்த் தறிந்து (46)

நஞ்சீயர் செய்த வியாக்கியைகள்⋆ நால் இரண்டுக்கு⋆
எஞ்சாமை யாவைக்கும் இல்லையே⋆ தம் சீரால்
வைய குருவுன் தம்பி⋆ மன்னு மணவாள முனி⋆
செய்யும் அவை தாமும் சில (47)

சீரார் வடக்குத் திருவீதிப் பிள்ளை⋆ எழு
    தேரார் தமிழ் வேதத்தீடு தனை⋆ தாரும் என
வாங்கி முன் நம்பிள்ளை⋆ ஈயுண்ணீ மாதவர்க்குத்
    தாம் கொடுத்தார்⋆ பின் அதனைத் தான் (48)

ஆங்கவர் பால் பெற்ற⋆ சிறியாழ்வானப் பிள்ளை⋆
    தாம் கொடுத்தார் தம் மகனார் தம் கையில்⋆ பாங்குடனே
நாலூர் பிள்ளைக்கவர் தாம்⋆ நல்ல மகனார்க்கவர் தாம்⋆
    மேலோர்க்கீந்தார் அவரே மிக்கு (49)

‡நம் பெருமாள் நம்மாழ்வார்⋆ நஞ்சீயர் நம்பிள்ளை
    என்பர்⋆ அவரவர் தம் ஏற்றத்தால்⋆ அன்புடையோர்
சாற்று திரு நாமங்கள்⋆ தான் என்று நன்னெஞ்சே!⋆
    ஏத்ததனைச் சொல்லி நீ இன்று (50)

துன்னு புகழ்க் கந்தாடைத்⋆ தோழப்பர் தம் உகப்பால்⋆
    என்ன உலகாரியனோ என்றுரைக்க⋆ பின்னை
உலகாரியனெனும் பேர்⋆ நம்பிள்ளைக்கோங்கி⋆
    விலகாமல் நின்றதென்றும் மேல் (51)

பின்னை வடக்குத் திருவீதிப் பிள்ளை⋆ அன்பால்
    அன்ன திருநாமத்தை ஆதரித்து⋆ மன்னு புகழ்
மைந்தர்க்குச் சாற்றுகையால்⋆ வந்து பரந்தது⋆ எங்கும்
    இந்தத் திருநாமம் இங்கு (52)

‡அன்ன புகழ் முடும்பை⋆ அண்ணல் உலகாசிரியன்⋆
    இன்னருளால் செய்த கலை யாவையிலும்⋆ உன்னில்
திகழ் வசனபூடணத்தின் சீர்மை⋆ ஒன்றுக்கில்லை⋆
    புகழல்ல இவ்வார்த்தை மெய் இப்போது (53)

முன்னம் குரவோர்⋆ மொழிந்த வசனங்கள்
    தன்னை⋆ மிகக் கொண்டு கற்றோர் தம் உயிர்க்கு⋆ மின்னணியாச்
சேரச் சமைத்தவரே⋆ சீர் வசன்பூடணம் என்னும்
    பேர்⋆ இக்கலைக்கிட்டார் பின் (54)

ஆர் வசனபூடணத்தின்⋆ ஆழ் பொருள் எல்லாம் அறிவார்⋆
    ஆரது சொன்னேரில் அனுட்டிப்பார்⋆ ஓர் ஒருவர்
உண்டாகில்⋆ அத்தனை காண் உள்ளமே⋆ எல்லார்க்கும்
    அண்டாததன்றோவது (55)

உய்ய நினை உடையீர்!⋆ உங்களுக்குச் சொல்லுகின்றேன்⋆
    வையகுரு முன்னம் வாய்மொழிந்த⋆ செய்யகலை
யாம்⋆ வசனபூடணத்தின் ஆழ் பொருளை⋆ கற்றதனுக்
    காம் நிலையில் நில்லும் அறிந்து (56)

தேசிகர் பால் கேட்ட⋆ செழும் பொருளைச்⋆ சிந்தை தன்னில்
    மாசறவே ஊன்ற மனனம் செய்து⋆ ஆசரிக்க
வல்லார்கள் தாம்⋆ வசனபூடணத்தின் வான் பொருளை⋆
    கல்லாதென்னோ கவர்ந்து (57)

சச் சம்பிரதாயம்⋆ தாம் உடையோர் கேட்டக்கால்⋆
    மெச்சும் வியாக்கியைகள் உண்டாகில்⋆ நச்சி
அதிகரியும் நீர்⋆ வசனபூடணத்துக்கற்ற
    மதி உடையீர்!⋆ மத்தியத்தராய் (58)

சீர் வசனபூடணத்தின்⋆ செம் பொருளை⋆ சிந்தை தன்னால்
    தேரிலுமாம்⋆ வாய் கொண்டு செப்பிலுமாம்⋆ ஆரியர்காள்!
என்தனக்கு⋆ நாளும் இனிதாக நின்றதையோ⋆
    உந்தமெக்கெவ்வின்பம் உளதாம் (59)

தம் குருவின் தாளிணைகள் தன்னில்⋆ அன்பொன்றில்லாதார்⋆
    அன்பு தன் பால் செய்தாலும் அம்புயை கோன்⋆ இன்ப மிகு
விண்ணாடு⋆ தானளிக்க வேண்டியிரான்⋆ ஆதலால்
    நண்ணாரவர்கள் திருநாடு (60)

‡ஞானம் அனுட்டானம் இவை⋆ நன்றாகவே உடையன்
    ஆன⋆ குருவை அடைந்தக்கால்⋆ மாநிலத்தீர்!
தேனார் கமலத்⋆ திரு மாமகள் கொழுநன்⋆
    தானே வைகுந்தம் தரும் (61)

உய்ய நினைவுண்டாகில்⋆ உன் குருக்கள் தம் பதத்தே
    வையும்⋆ அன்புதனை இந்த மாநிலத்தீர்!⋆ மெய் உரைக்கேன்
பை அரவில் மாயன்⋆ பரம பதம் உங்களுக்காம்⋆
    கையிலங்கு நெல்லிக்கனி (62)

ஆசாரியன் செய்த⋆ உபகாரம் ஆனவது⋆
    தூய்தாக நெஞ்சு தன்னில் தோன்றுமேல்⋆ தேசாந்-
தரத்தில் இருக்க⋆ மனம்தான் பொருந்த மாட்டாது⋆
    இருத்தல் இனி ஏதறியோம் யாம் (63)

தன் ஆரியனுக்குத்⋆ தான் அடிமை செய்வது⋆ அவன்
    இந்நாடு தன்னில் இருக்கும் நாள்⋆ அந்நேர்
அறிந்தும் அதில் ஆசை இன்றி⋆ ஆசாரியனைப்
    பிரிந்திருப்பார் ஆர்⋆ மனமே! பேசு (64)

ஆசாரியன்⋆ சிச்சன் ஆருயிரைப் பேணும் அவன்⋆
    தேசாரும் சிச் சனவன் சீர் வடிவை⋆ ஆசையுடன்
நோக்கும் அவன் என்னும்⋆ நுண்ணறிவைக் கேட்டு வைத்தும்⋆
    ஆர்க்கும் அந்நேர் நிற்கை அரிதாம் (65)

பின்பழகராம்⋆ பெருமாள் சீயர்⋆ பெருந்திவத்தில்
    அன்பதுவும் அற்று மிக்க வாசையினால்⋆ நம்பிள்ளைக்
கான அடிமைகள் செய்⋆ அந்நிலையை நல் நெஞ்சே⋆
    ஊனமற எப்பொழுதும் ஓர் (66)

ஆசாரியர்கள்⋆ அனைவரும் முன் ஆசரித்த⋆
    ஆசாரந் தன்னை அறியாதார்⋆ பேசுகின்ற
வார்த்தைகளைக் கேட்டு⋆ மருளாதே⋆ பூருவர்கள்
    சீர்த்தநிலை தன்னை நெஞ்சே! சேர் (67)

நாத்திகரும் நற்கலையின்⋆ நன்னெறிசேர் ஆத்திகரும்⋆
    ஆத்திக நாத்திகருமாம் இவரை⋆ ஓர்த்து நெஞ்சே!
முன்னவரும் பின்னவரும்⋆ மூர்க்கர் என விட்டு⋆ நடுச்
    சொன்னவரை நாளும் தொடர் (68)

நல்ல மணம் உள்ளதொன்றை⋆ நண்ணி இருப்பதற்கு⋆
    நல்ல மணம் உண்டாம் நயமது போல்⋆ நல்ல
குணம் உடையோர் தங்கள் உடன்⋆ கூடி இருப்பார்க்கு⋆
    குணம் அதுவே யாம் சேர்த்தி கொண்டு (69)

தீய கந்தம் உள்ளதொன்றைச்⋆ சேர்ந்திருப்பதொன்றுக்கு⋆
    தீய கந்தம் ஏறும் திறமது போல்⋆ தீய
குணம் உடையோர் தங்கள் உடன்⋆ கூடி இருப்பார்க்கு⋆
    குணம் அதுவே யாம் செறிவு கொண்டு (70)

முன்னோர் மொழிந்த⋆ முறை தப்பாமல் கேட்டு⋆
    பின்னோர்ந்து தாம் அதனைப் பேசாதே⋆ தம் நெஞ்சில்
தோற்றினதே சொல்லி⋆ இதுசுத்த உபதேசவர
    வாற்றதென்பர்⋆ மூர்க்கர் ஆவார் (71)

## சாற்றுப் பாசுரங்கள்

‡பூருவாசாரியர்கள்⋆ போதம் அனுட்டானங்கள்⋆
    கூறுவார் வார்த்தைகளைக் கொண்டு நீர் தேறி⋆
இருள் தருமா ஞாலத்தே⋆ இன்பம் உற்று வாழும்⋆
    தெருள் தருமா தேசிகனைச் சேர்ந்து (72)

‡இந்த உபதேச ரத்தினமாலை தன்னைச்⋆
    சிந்தை தன்னில் நாளும் சிந்திப்பார்⋆ எந்தை
எதிராசர்⋆ இன் அருளுக்கென்றும் இலக்காகி⋆
    சதிராக வாழ்ந்திடுவர் தாம் (73)

## எறும்பியப்பா அருளிச்செய்தது

மன்னுயிர்காள் இங்கே மணவாள மாமுனிவன்⋆
    பொன்னடியாம் செங்கமலப் போதுகளை⋆ உன்னிச்
சிரத்தாலே தீண்டில் அமான் அவனும் நம்மை⋆
    கரத்தாலே தீண்டல் கடன் (74)

॥ ஸ்ரீமணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம் ॥